

விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் டிக்கெட் வாங்க காத்திருக்கும் பயணிகள்.

## வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் இடையே

# 'மெட்ரோ ரெயில் சேவை எங்களுக்கு வரப்பிரசாதம்'

## பயணிகள் வரவேற்பு

வண்ணாரப் பேட்டை– விம்கோ நகர் இடையே 9.5 கி.மீட்டர் தூரத் துக்கு ரூ.3,770 கோடி செலவில் மெட்ரோ ரெயில் சேவை விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

இதனை பிரதமர் நரேந்திர மோடி நேற்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார்.

### நிலத்துக்கு கீழ்

இதில் வண்ணாரப்பேட் டை– விம்கோ நகர் இடையே மொத்தம் 8 மெட்ரோ ரெயில் நிறுத்தங்கள் உள்ளது. வண் ணாரப்பேட்டை, தியாக ராஜா கல்லூரி, தண்டை யார்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையங்கள் நிலத் துக்கு கீழ் அமைக்கப்பட்டு உள்ளன.

புதுவண்ணாரப்பேட்டை, காலடிப்பேட்டை, திரு வொற்றியூர் தேரடி, திருவொற்றியூர் பஸ் நிலையம் பகுதிகளில் நிலத்துக்கு மேல் மெட்ரோ ரெயில் நிலையங்கள் உள்ளன. இதில் திருவொற்றியூர் தேரடி ரெயில் நிலையத்தில் இன்னும் பணிகள் முடிக் கப்படவில்லை. இதனால் அந்த மெட்ரோ ரெயில் நிலையம் மட்டும் பயன்பாட் டுக்கு வரவில்லை.

திருவொற்றியூர் தேரடி யில் அதிகபட்சமாக 45 அடி உயரத்தில் தூண்கள் அமைத்து மெட்ரோ ரெயில் பாதை செல்வது குறிப்பிடத் தக்கது.

புதிதாக தொடங்கப்பட்டு உள்ள வண்ணாரப்பேட்டை– விம்கோ நகர் இடை யிலான மெட்ரோ ரெயில் சேவைக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. பயண நேரம், கூட்ட நெரிசல் இல்லாமல் பயணம் செய்வதாக மகிழ்ச்சியுடன் தெரி வித்தனர்.



இன்று காலை விம்கோ நகர் மெட்ரோ நிலையத்தில் பயணம் செய்ய வந்த கண வன்– மனைவியான பூதேவ்–வைசுனு கூறியதாவது:-

நாங்கள் இருவரும் கோயம் பேடு பஸ் நிலையத்தில் இருந்து வந்தோம். நாங்கள் வழக்கமாக பஸ்சில் வருவோம். பஸ்சில் வந்தால் ஒன்றரை மணி நேரம் ஆகும். மெட்ரோ ரெயிலில் 45 நிமிடங்களில் வந்து விட்டோம். இது மகிழ்ச்சியாக இருக்கிறது. மெட் ரோ ரெயி லில் வந்ததால் பயணக் களைப்பும் இல்லை. பயண நேரமும் குறைவாக உள்ளது.



**பிரசன்னதேவி (ஆயிரம் விளக்கு):–** நான் ஆயிரம் விளக்கு பகுதி யில் இருந்து விம்கோ நகர் வரை மெட் ரோ ரெயிலில் வந்தேன்.

பஸ்சில் வந் தால் ஒரு மணி நேரம் ஆகும். ஆனால் மெட்ரோ ரெயில் 20 நிமிடத்திற்குள் வந்து சேர்ந்து விட்டது. மேலும் அந்த பகுதிக்கு அடிக்கடி பஸ் வசதி கிடையாது. கூட்ட நெரிசல் வேறு.

எனவே மெட்ரோ ரெயில் சேவை எங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந் துள்ளது. பாதுகாப்புடன் சொகுசாக வருவதால் கட்டணம் பற்றி கவலையில்லை.

**பிரித்திகா (திருவொற்றியூர்)–** நான் திருவொற் றியூர் மேற்கு பகுதியில் இருந்து ஆயி ரம் விளக்கு பகுதிக்கு செல்ல வந் துள் ளேன். மேற்கு பகுதியில் இருந்து விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு எப்படி செல்வது என்று பெயர்ப்பலகை ஏதும் வைக்கப்படவில்லை.



இதே போல விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலை யத்தின் உள்ளே செல்வதற்கு சரியான வழி தெரியவில்லை. இதற்கு உரிய பெயர் பலகை வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.